# கணக்கீடு

நிதிக் கூறுகளைத் தயாரிக்கும் போதும் முன்வைக்கும்போதும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை பயன்படுத்தல்



The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி 12

தேர்ச்சி மட்டம் 12.2

## பங்கு வழங்கலும் பணத்தினைப் பெற்றுக்கொள்ளலும்

பங்குவழங்கல் ஆரம்பப் பங்குவழங்கல் அல்லது பொதுப் பங்குவழங்கல் மூலம் மேற்கொள்ள முடியுமாக இருப்பதுடன் அதற்கான பிரதிபயனை ஒரே முறையில் அல்லது தவணை முறையில் பெற்றுக்கொள்ள முடியும்

பங்குவழங்கல் பிரதிபயனை ஒரே முறையில் பெற்றுக்கொள்ளும் பங்குகளை மாத்திரமே பங்குச் சந்தையில் பரிமாற்ற முடியும் என்பதை பங்குச்சந்தை சட்ட விதி கூறுகின்றது.

**பங்குவழங்கலின் பெறுமதியினை ஒரே முறையில் பெறும்போது அதற்குரிய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்குகளில் பதிவு செய்தல்.**

## பங்கு வழங்கல்

1) கம்பனி கூட்டிணைக்கப்பட்ட உடனேயே கூட்டிணைப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பங்காளர்களுக்கும் பங்குகள் வழங்கப்படல் வேண்டும் என கம்பனிச் சட்டத்தில் 51ம் பிரிவு கூறுகின்றது. இதனை தொடக்கப் பங்குகள் எனலாம்

2) தொடக்கப் பங்குகள் வழங்கிய பின்னர், கம்பனிச் சட்டத்தின் 52ம், 53ம் பிரிவுகளுக்கு அமைய இயக்குனர்சபை தீர்மானிக்கும் அடிப்படையில் பொதுமக்கள், முதலீட்டாளர்களுக்கு பங்குகளை வழங்க முடியும்




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பங்கு வழங்கல் பிரதி பயன்கள்

கம்பனிச் சட்டத்தின் 52ம் பிரிவுக்கமைவாக,இயக்குனர்சபை பங்குவழங்கலுக்கான பிரதிபயனை தீர்மானிக்க முடியும்

பிரதிபயன் என்பது,பாங்கொன்றுக்கு வழங்கப்படும் பெறுமதியாகும் அவையாவன





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பங்குகளுக்கான பிரதிபயனை விண்ணப்பத்தின்போது ஒரே தடவையில் கம்பனியால் கோரமுடியும் அல்லது பங்கின் பெறுமதியை விண்ணப்பத்தினைத் தொடர்ந்து பகுதி பகுதியாக அழைத்துப் பெற முடியும்

## பங்கு வழங்கல் நடைமுறைகள்

1) முன்விபரணத்தினை வெளியிடுவதன் மூலம் பொதுமக்களை பங்கு வாங்கும்படி அழைப்பினை விடுதல்

2) கம்பனியின் பங்குகளை வாங்க விரும்புவோர் முன்விபரணத்தில் குறிப்பிடப்பட்ட வங்கி மூலம் பங்குகளை வாங்குவதற்கான விண்ணப்பத்தினையும் உரிய பணத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்

3) விண்ணப்ப இறுதித் திகதியின்பின் வங்கியால் பெறப்பட்ட விண்ணப்பங்கள் பற்றிய அறிக்கையொன்று கம்பனியின் பிரதான அலுவலகத்திற்கு வங்கியினால் அனுப்பி வைக்கப்படும்

4) இப் அறிக்கையின் பிரகாரம் விண்ணப்பப பத்திரங்களை இயக்குனர்கள் பரிசீலனை செய்து அவர்கள் விண்ணப்பித்த முழுப்பங்கினையும் அல்லது விண்ணப்பித்த பங்குகளின் ஒரு பகுதியினை பங்குகளாக வழங்குவதற்கு ஒதுக்கற் தீர்மானம் எடுக்கப்படும்

5) மிகை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு விண்ணப்பப்பணம் திரும்பி அனுப்பப்படும்.

6) ஒதுக்கப்பட்ட பங்குகளுக்குரிய பணத்தினை பெற்றுக்கொள்ளுதல்

தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் ஆசிரியர் - கணக்கீடு, (யா/ யாழ்ப்பாண இந்துக்கல்லூரி)

கணணி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜனார்த்தனன் ஆசிரியர் - கணிதம்இ(கிளி.:.கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**பிரதிபயனை ஒரே முறையில் பேற்றுக்கொள்ளும்போது காசுப் பெறுவனவப் பதிவுசெய்வதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைப் பின்வருமாறு காட்டலாம்**

| | | | |
|---|---|---|---|
| **விண்ணப்பத்துடன் காசு பெறல்** | | | |
| காசுக் கணக்கு | வரவு | XX | |
| பங்குவழங்கல் கணக்கு | செலவு | | XX |
| **மிகை விண்ணப்பப்பணம் நிராகரித்தல்** | | | |
| பங்குவழங்கல் கணக்கு | வரவு | XX | |
| காசுக் கணக்கு | செலவு | | XX |
| **பங்குகளை ஒதுக்குதல்** | | | |
| பங்குவழங்கல் கணக்கு | வரவு | XX | |
| கூறப்பட்ட மூலதனக் கணக்கு | செலவு | | XX |

**உதாரணம் :-** வரையறுக்கப்பட்ட நொதோன் கம்பனி 50 000 சாதாரண பங்குகளையும் ரூ.50படி முற்றிலும் அழைத்த பங்குகளாக வழங்கியது 55 000 பங்குகளுக்கு விண்ணப்பிப்பதைப் பெற்ற கம்பனி மேலதிக மனுப்பணங்களை நிராகரித்து எஞ்சிய பங்குகளுக்கு ஒதுக்கல் செய்தது

**வேண்டப்படுவது :-** நாட்குறிப்புப் பதிவுகள்

| திகதி | விபரம் | | வரவு | செலவு |
|---|---|---|---|---|
| 01 | காசுக் கணக்கு (55 000 x 50) | வரவு | 2 750 000 | |
| | பங்குவழங்கல் கணக்கு | செலவு | | 2 750 000 |
| | (மனுப்பணம் பெறப்பட்டது) | | | |
| 02 | பங்கு வழங்கல் கணக்கு (5 000 x 50) | வரவு | 250 000 | |
| | காசுக் கணக்கு | செலவு | | 250 000 |
| | (மேலதிக விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டன) | | | |
| 03 | பங்கு வழங்கல் கணக்கு (50 000 x 50) | வரவு | 2 500 000 | |
| | கூறப்பட்ட மூலதனக் கணக்கு | | | 2 500 000 |
| | (பங்குகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது) | | | |


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சி

வரையறுக்கப்பட்ட சுரேஸ் கம்பனி பதிவு செய்யப்பட்டவுடன் 100 000 சாதாரண பங்குகளை ஒவ்வொன்றும் ரூ. 20 படி முற்றிலும் அழைக்கப்பட்ட பங்குகளை வழங்கியது. அனைத்துப் பங்குகளுக்கும் விண்ணப்பப் பணத்தினைப் பெற்றுக்கொண்ட கம்பனி விண்ணப்பித்த பங்குகள் அனைத்திற்கும் ஒதுக்கல் செய்தல்

**வேண்டப்படுவது :-** நட்க்குறிப்புப் பதிவுகள்

தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் ஆசிரியர் - கணக்கீடு, (யா/ யாழ்ப்பாண இந்துக்கல்லூரி)

கணணி வடிவமைப்பு : திரு.ஜெ.ஜனார்த்தனன் ஆசிரியர் - கணிதம்இ(கிளி.:.கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk